1975 அக்டோபர் 24]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி குடிநீர் வழங்கு-வடிகால் வாரியத்தின் சார்பில் ஒரு பிரதிநிதி பம்பாய்க்குச் சென்று சாக்கடை நீரைச் சுத்தப்படுத்தும் திட்டத்தைப் பார்த்து வந்தாரா என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, சாக்கடை நீரைச் சுத்தப்படுத்திய பின், அந்த நல்ல தண்ணீரை தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கு தொழிலதிபர்கள் தாமாக முன்வந்தால், அந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கான ஒரு யோசனை அரசுக்கு இருக்கிறது. தொழிலதிபர்கள் முன்வருவார்களேயானால், நிலையாக அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் ஒரு வாய்ப்பு உண்டாகும்.

Scarcity of Medicines in Government Hospitals, Madras.

* 8. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether the scarcity of medicines found in the Government Hospitals, Madras, has been brought to the notice of the Government; and

(*b*) if so, the reason for the scarcity of medicines?

சென்னை அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னையிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை இருந்துவருவதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா?

(இ) ஆமெனில், அப்பற்றாக்குறைக்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) சென்னையிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்படவில்லை. எல்லா மருந்துகளும் மருத்துவமனைகளில் உள்ளன. எந்த ஒரு மருத்துவமனையிலிருந்தும் மருந்துகள் இல்லை என்ற புகார் வரவில்லை.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மைய மருந்தகத்திலிருந்து அரசாங்க மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் அனுப்புவதில் 7 நாள், 10 நாள் வரை தாமதம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அரசாங்க மருத்துவ மனைகளில் மருந்துகள் பற்றாக்குறை ஏற்படுகிறது. மைய மருந்தகத்திலிருந்து மருந்துகள் மிகத் தாமதமாக வருவதாகப் புகார் கூறப்படுவதுபற்றி அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மைய மருந்துக் கிடங்கிலிருந்து அரசாங்க மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வருவதிலே சற்றுத் தாமதம் இருக்கலாம். அதற்காக மருத்துவ மனைகளில் மருந்தே இல்லை என்று சொல்வது தவறு. பொதுவாக மருத்துவமனைகளில் மருந்து தீருவதற்கு முன்பே, அரசாங்க மருத்துவ மனைகளின் தலைமை அதிகாரியோ, மாவட்ட மருத்துவ அதிகாரியோ குறிப்பிட்ட மருந்தை அனுப்பும்படியாக எழுதுவார்கள். எப்போதாவது சில சமயங்களில் ஒரு சில குறிப்பிட்ட மருந்துகள் இந்தியா முழுவதற்கும் போதுமான அளவில் அவர்களால் விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டதுண்டு. ஆனால் அவ்வாறு பற்றாக்குறை ஏற்பட்ட மருந்துக்கு பதிலாக அதே தகுதிகளையுடைய வேறு மாற்று மருந்துகள் மருத்துவமனைகளில் இருக்கும். மேலும் அந்த மாற்று மருந்துகள் பற்றாக்குறை ஏற்பட்ட மருந்துக்கு பதிலாகக் கொடுக்கப்படலாம் என்று தாம் நிர்ணயிப்பவர்களால் நிர்ணயிக்கப்பட்ட முழுத் தகுதியுடைய மருந்துகளாகும். பொதுவாக இன்றுள்ள நடைமுறை என்னவென்றால், ஒரு பகுதியிலே ஒரு குறிப்பிட்ட மருந்துக்குப் பற்றாக்குறை என்றால், இன்னொரு பகுதிக்குச் சென்று முயற்சி செய்தால், அந்த இடத்திலாவது மருந்து கிடைக்கும் ஒரு நிலைமை இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: யு.என்.ஐ. செய்தி ஸ்தாபனம் இம்மாதிரி அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகள் பற்றாக்குறை இருக்கின்றது என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது. நோயாளிகள் இதன் காரணமாகத் தொல்லைப்படுகிறார்கள் என்றும் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அது பற்றி அரசுக்குத் தெரியுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த சமயத்திலே அந்தச் செய்தி ஸ்தாபனத்துக்கு வேறு எந்தவிதமான செய்தியும் கிடைக்காமல் இருந்திருக்கலாம். அதனால் அப்படிப்பட்ட செய்தி வந்திருக்கலாமென்று நினைக்கிறேன். (சிரிப்பு)

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: அரசாங்கத் தலைமை மருத்துவ மனை ஒன்று நாமக்கல்லில் இருக்கிறது. அங்கு ஆக்சிஜன் சிலிண்டர் இல்லாமற்போனதால், நோயாளிகளுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. அங்கு சிகிச்சைக்கு என்று வந்த ஒரு அரசு ஊழியரைக் காப்பாற்ற முடியாத நிலைகூட ஏற்பட்டது. ஆகவே அரசுத் தலைமை மருத்துவமனைகளுக்காவது உடனடியாக ஆக்சிஜன் சிலிண்டர்களை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி தலைமை மருத்துவ மனைகள் எதிலாவது ஆக்சிஜன் சிலிண்டர் தேவையென்று கேட்டால், அது பரிசீலிக்கப்படும்.

1975 அக்டோபர் 24]

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : யு.என்.ஐ. செய்தி ஸ்தாபனத்திற்கு வேறு செய்திகள் கிடைக்காததால் இம்மாதிரிப் போட்டிருக்கலாம் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாத நிலைதான் இது. (சிரிப்பு)

THIRU A. R. DAMODARAN : Sir, is there any provision by which the Superintendents of these hospitals are permitted to purchase drugs from nearby Drug Stores in case there is any delay in receiving them from the Central Depot; and number two, is there a separate section or an officer dealing with the question of the supply of drugs to various Hospitals in our State, and if not, whether a special post would be created and that gentleman held responsible for all such shortages of drugs in hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருந்துகள் பொதுவாகக் கிடைக்கவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள இயலாத நிலை இன்றைக்கு இருக்கிறது. காரணம், இன்றைக்கு ஒரு இடத்திலே கிடைக்காத மருந்து இன்னொரு இடத்திலே கிடைக்கிறது. மருந்து தேவைப்படும் யாருக்கும் எப்படியும் கிடைக்கத்தான் செய்கிறது. அன்றியும் டாக்டர் ஒரு நோயாளியைப் பார்த்து, அவர் இன்ன மருந்தைச் சாப்பிட வேண்டுமென்று சொல்லும் அந்தக் குறிப்பிட்ட மருந்து கிடைக்காவிட்டாலும் கூட, அதே தகுதியுள்ள வேறு மருந்துகள் இருக்கின்றன என்பது மருத்துவத் துறையாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தந்த மருந்து தீருவதற்கு முன்பாக அந்த மருந்தைத் தருவிப்பதற்காக கடிதம் எழுதும் பொறுப்பு அந்தந்த மருத்துவமனைகளின் தலைமை அலுவலருக்கோ, மாவட்டத் தலைமை மருத்துவ அதிகாரிக்கோ இருக்கிறது. அவர்கள் அந்த முறையில் பெற்றுக் கொள்கிறார்கள். எமர்ஜன்சி சிட்டுவேசனில்—அவசரக் காலங்களில் வெளியில் கிடைக்கும் இடங்களிலிருந்தும் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு மருந்துகளை வாங்குவதற்கு முன்பு அதன் விலையைக் கேட்டு, அதன் பிறகு வாங்க வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. அந்த முறையும் ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்றால், அவசரக் காலங்களில் வாங்கும் போது, ஏதாவது தவறுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான். எல்லாவற்றையும் விட நோயாளிக்கும் ஒரு பொறுப்பிருக்கிறது. அதாவது ஓரிடத்தில் மருந்து கிடைக்காவிட்டாலும், இன்னொரிடத்திலிருந்தாவது முயற்சி செய்து தானே அதனை வாங்குகிற முயற்சியும் பொறுப்பும்தான். எல்லா மருந்துகளையும் மருத்துவமனைகளிலிருந்தே வாங்கிச் சாப்பிடக் கூடிய

வாய்ப்பு சில நேரங்களில் ஒருசிலருக்கு இல்லாமல் இருக்கக்கூடும். அவர்களுக்கு வெளியிலிருந்து வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி வெளியேயும் கிடைக்காவிட்டால், இந்தியாவிலும் அந்த மருந்து இல்லாவிட்டால், தேவைப் பட்டால் வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொள்ளும் வாய்ப்பும் இப்பொழுது இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நோய்க்கு ஆளான வர்கள்தான் முயற்சி செய்து தேவைப்படும் மருந்தைப் பெற வேண்டும்.

(பிற்பகல் 4-30)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: சில மருந்தகங்களுக்கு மருந்துகள் தேவையின் அளவைக் குறிப்பிட்டு, மொத்தமாக இவ்வளவு ரூபாய்தான், அதற்குள்ளாகத்தான் நிர்வாகம் செயல்படவேண்டுமென்ற ஒழுங்குமுறை நடை முறையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏராளமான நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குகிற மருத்துவமனைகள் ஒவ்வொன்றுக்கும் எல்லைக்கோடு ஒன்று இருக்கின்றது. முதல் மூன்று மாதங்களுக்கு இவ்வளவு மருந்துகள் வாங்குவது, முதலில் 30 சதவிதம், 25 சதவிதம், அதற்கு அடுத்த மாதங்களில் 25 சதவிதம், 20 சதவிதம் என்று மருந்துகளை வாங்கி ஆண்டு முழுவதும் வழங்குவதற்கான ஒரு நிலை நீடிக்க வேண்டும். மருத்துவமனைகளிலே மருந்துகளை எல்லாம் அளவிட்டுத் தராதபோது, அதற்காகும் செலவுக்கு அளவே காண முடியாது. 'ரெஸ்ட்ரிக்ஷன்' இல்லாத வகையில் வழங்குகிற நிலைமை இந்தியா முழுவதுமே காண முடியாது. வேறுவகையிலே ஏதாவது செய்தால்கூட, யார் கொடுப்பது, யாரிடத்திலே கொடுப்பது என்பது போன்ற முறைகளைத் திருத்த வேண்டியது அவசியமாகி வருகின்றது.

THIRU A. R. DAMODARAN : Sir, now that life insurance has been nationalised, will the Hon. the Minister for Health consider a proposal, in consultation with the Life Insurance Corporation, for introducing some sort of medical insurance-*cum*-sickness insurance plan in our State, at least for employed persons who are employed in private establishments and offices, apart from the E.S.I. Scheme?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்படி ஒரு திட்டம் இடம் பெறு மானால், பொது மக்களுக்கேகூட நல்லது. ஆனால் திட்டத்தினுடைய அளவும் முறையும் இப்படித்தான் இருக்க முடியும் என்று சொல்வது மத்திய அரசு தான். ஏனென்றால் அகில இந்தியா முழுவதும் ஈ.எஸ்.ஐ.சி. இயங்குகிற காரணத்தால், ஒரு மாநிலத்திலே மட்டும் அப்படி ஒன்றைக் கொண்டு வர முடியாது. மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு நடை

1975 அக்டோபர் 24]

முறைக்குக் கொண்டு வருமானால், அதை இந்தத் தமிழ் நாடு அரசு வரவேற்கும். ஆனால் அந்த ஆலோசனைகள் எல்லாம் பேசப்பட்டு, அவை ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்றுதான் நான் அறிந்திருக்கிறேன்.

Paddy Merchants charged with hoarding.

*9 *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether paddy merchants charged with hoarding were handcuffed and paraded in the streets of some towns in Madurai District between 18th and 25th December, 1974;

(*b*) if so, the offences with which they were charged; and

(*c*) the provisions of law under which such action was taken against them?

பதுக்கல் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நெல் வணிகர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், 1974 டிசம்பர் திங்கள் 18-க்கும் 25-க்கும் இடைப்பட்ட நாட்களில் பதுக்கல் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நெல் வணிகர்கள், விலங்கிட்டு தெருக்கள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்கள்மீது சாட்டப்பட்ட குற்றங்கள் யாவை?

(உ) சட்டத்தின் எந்த விதித்துறைகளின்கீழ் அவர்கள் மீது அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) & (உ) அரிசியைப் பதுக்கி, கள்ளத்தனமாக கேரளாவிற்குக் கடத்திச் செல்வது போன்ற நடவடிக்கைகளில் வழக்கமாக ஈடுபட்டு வந்தனர். 1971 ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 26/1971) விதித்துறைகளின்கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

THIRU A. R. DAMODARAN: Sir, the question is whether these people were handcuffed and paraded in the streets of some towns. May I know, Sir, whether this was done by the police